சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.4/2022

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசாமி | வயது | 75 |
| த/பெ | காரைய்ய கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | கே. புங்கம்பாளையம். காரமடை, மருதூர் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | |

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

எதற்காக மீண்டும் பிராதை சீர்திருத்தம் செய்தேன் என்றால் அ.வ.எண்.13/2005 என்ற வழக்கில் நான் தரப்பினராக இல்லாததால் அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை செல்லாது என பரிகாரம் கேட்டு சீர்திருத்தம் செய்து உள்ளேன். அ.வ.எண்.13/2005 என்ற வழக்கை யார், யார் மீது தாக்கல் செய்தார் என்றால் காளப்ப கவுடர், காளம்மாள், நாகராஜ், ராமசாமி மற்றும் கந்தசாமி ஆகியோர்கள் தாக்கல் செய்தார்கள். யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு தெரியாமல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்தில் எனக்கு எந்தவிதமான உரிமையும் பாத்தியமும் இல்லாததால் தான் அந்த வழக்கில் என்னை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி யல்ல. அந்த வழக்கை எந்த ஆண்டு தாக்கல் செய்தார்கள் என்றும் எவ்வளவு நாட்களாக நடந்தது என்றால் எனக்கு தெரியாமல் தாக்கல் செய்ததால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கின் அடிப்படையில் இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு பாகப் பிரிவினை செய்யப்பட்டு விட்டதா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லாததால் தான் அதை பற்றி எனக்கு தெரிய வில்லை என்றால் சரி யல்ல. சீர்

திருத்தம் செய்யப்பட்ட பிராதின் படியும் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரி யல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/-G.Gengaraj,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.